TNPSC JOB

பிரிலியண்ட்'ஸ்

# சமூக அறிவியல்

# 8

(புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டது)

**சிறப்பு அம்சங்கள்**

**தமிழ்நாடு அரசின்** புதிய பாடத்திட்டத்தின்படி பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து பிரிவு வினாக்களுக்கும் விடைகள் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

**கூடுதலாக** அனைத்துப் பாடங்களுக்கும் மனவரைபடம், சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக, கோடிட்ட இடங்களை நிரப்புக, பொருத்துக, சிறுவினாக்கள் மற்றும் பெருவினாக்களுக்கு எளிமையாக விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

பருவத் தேர்வுகள்

**கூடுதல் வரைபட பயிற்சி புத்தகம்**

(இரண்டு புத்தகங்களின்) **விலை: ரூ.170/-**

© *All rights reserved*

**பிரிலியண்ட் பப்ளிகேஷன்ஸ்®**
20/13, வடக்கு சித்திரை வீதி, மதுரை – 625001.
போன்: 9442563752, 9843363752, 9487563752, 9443063752

TNPSC JOB | www.tnpscjob.com

# பொருளடக்கம்


| அலகு | பாடத் தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1 | ஐரோப்பியர்களின் வருகை | 5 |
| 2 | வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை | 13 |
| 3 | கிராம சமூகமும் வாழ்க்கை முறையும் | 23 |
| 4 | மக்களின் புரட்சி | 31 |
| 5 | இந்தியாவில் கல்வி வளர்ச்சி | 40 |
| 6 | இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி | 49 |
| 7 | ஆங்கிலேயர் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள் | 57 |
| 8 | காலங்கள் தோறும் இந்தியப் பெண்களின் நிலை | 66 |
| | **புவியியல்** | |
| 1 | பாறை மற்றும் மண் | 75 |
| 2 | வானிலை மற்றும் காலநிலை | 86 |
| 3 | நீரியல் சுழற்சி | 94 |
| 4 | இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல் | 103 |
| 5 | இடர்கள் | 112 |
| 6 | தொழிலகங்கள் | 120 |
| 7 | கண்டங்களை ஆராய்தல்<br>(ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா) | 130 |
| 8 | புவிப்படங்களைக் கற்றறிதல் | 140 |

| குடிமையியல் | | |
|---|---|---|
| 1 | மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது | 150 |
| 2 | குடிமக்களும் குடியுரிமையும் | 157 |
| 3 | சமயச் சார்பின்மையைப் புரிந்துகொள்ளுதல் | 163 |
| 4 | மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் | 170 |
| 5 | சாலை பாதுகாப்பு விதிகள் மற்றும் நெறிமுறைகள் | 180 |
| 6 | பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை | 190 |
| 7 | நீதித்துறை | 198 |
| **பொருளியல்** | | |
| 1 | பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள் | 208 |
| 2 | பொது மற்றும் தனியார் துறைகள் | 217 |
| **பருவத் தேர்வுகள்** | | |
| 1 | காலாண்டு மாதிரி பருவத் தேர்வு | 226 |
| 2 | இரண்டாம் பருவ மாதிரி தேர்வு | 228 |
| 3 | அரையாண்டு மாதிரி பருவத் தேர்வு | 230 |
| 4 | மூன்றாம் பருவ மாதிரி தேர்வு | 232 |
| 5 | முழு ஆண்டு மாதிரி பருவத் தேர்வு | 234 |
| 6 | அரசு மாதிரி வினாத்தாள் 2019 – 2020 | 236 |

# சமூக அறிவியல்

## எட்டாம் வகுப்பு

PUBLICATIONS


# வரலாறு

அலகு – 1

# ஐரோப்பியர்களின் வருகை



## மன வரைபடம்




BRILLIANT PUBLICATIONS

## மதிப்பீடு

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:

**1. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார்?**

அ) வாஸ்கோடகாமா ஆ) பார்த்தலோமியோ டயஸ்

இ) அல்போன்சோ–டி–அல்புகர்க் ஈ) அல்மெய்டா

**விடை: இ) அல்போன்சோ-டி-அல்புகர்க்**

**2. பின்வரும் ஐரோப்பிய நாடுகளுள் இந்தியாவுக்கு கடல்வழியைக் கண்டுபிடிப்பதில் முதன்மையாக இருந்த நாடு எது?**

அ) நெதர்லாந்து (டச்சு) ஆ) போர்ச்சுகல்

இ) பிரான்ஸ் ஈ) பிரிட்டன்

**விடை: ஆ) போர்ச்சுகல்**

**3. 1453ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டிநோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?**

அ) பிரான்ஸ் ஆ) துருக்கி

இ) நெதர்லாந்து (டச்சு) ஈ) பிரிட்டன்

**விடை: ஆ) துருக்கி**

**4. சர் வில்லியம் ஹாக்கின்ஸ் ................ நாட்டைச் சேர்ந்தவர்**

அ) போர்ச்சுக்கல் ஆ) ஸ்பெயின்

இ) இங்கிலாந்து ஈ) பிரான்ஸ்

**விடை: இ) இங்கிலாந்து**

**5. இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை**

அ) வில்லியம் கோட்டை ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை

இ) ஆக்ரா கோட்டை ஈ) டேவிட் கோட்டை

**விடை: ஈ) டேவிட் கோட்டை**

**6. பின்வரும் ஐரோப்பிய நாட்டினருள் வியாபாரத்திற்காக, இந்தியாவிற்கு வருகை தந்த கடைசி ஐரோப்பிய நாட்டினர்**

அ) ஆங்கிலேயர்கள் ஆ) பிரெஞ்சுக்காரர்கள்

இ) டேனியர்கள் ஈ) போர்ச்சுக்கீசியர்கள்

**விடை: ஆ) பிரெஞ்சுக்காரர்கள்**

**7. தமிழ்நாடு கடற்கரையோரத்தில் உள்ள தரங்கம்பாடி ................ வர்த்தக மையமாக இருந்தது.**

அ) போர்ச்சுக்கீசியர்கள் ஆ) ஆங்கிலேயர்கள்

இ) பிரெஞ்சுக்காரர்கள் ஈ) டேனியர்கள்

**விடை: ஈ) டேனியர்கள்**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. இந்தியாவின் தேசிய ஆவணக்காப்பகம் (NAI) ................ல் அமைந்துள்ளது.
   **விடை: புது டெல்லி**
2. போர்ச்சுக்கீசிய மாலுமியான பார்த்தலோமியோ டயஸ் ................ என்பவரால் ஆதரிக்கப்பட்டார்.
   **விடை: இரண்டாம் ஜான்**
3. இந்தியாவில் அச்சு இயந்திரம் 1556இல் ................ அரசால் கோவாவில் நிறுவப்பட்டது.
   **விடை: போர்ச்சுக்கீசிய**
4. முகலாயப் பேரரசர் ................ இந்தியாவில் ஆங்கிலேயர்கள் வர்த்தகம் செய்ய அனுமதி அளித்தார்.
   **விடை: ஜஹாங்கீர்**
5. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் ................ என்பவரால் நிறுவப்பட்டது.
   **விடை: கால்பர்ட்**
6. ................ என்ற டென்மார்க் மன்னர், டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்க ஒரு பட்டயத்தை வெளியிட்டார்.
   **விடை: நான்காம் கிறிஸ்டியன்**

## III. பொருத்துக:

| | | |
|---|---|---|
| 1. | டச்சுக்காரர்கள் | அ) 1664 |
| 2. | ஆங்கிலேயர்கள் | ஆ) 1602 |
| 3. | டேனியர்கள் | இ) 1600 |
| 4. | பிரெஞ்சுக்காரர்கள் | ஈ) 1616 |

TNPSC JOB | www.tnpscjob.com
BRILLIANT PUBLICATIONS

**விடை:**

| | | |
|---|---|---|
| 1. | டச்சுக்காரர்கள் | ஆ) 1602 |
| 2. | ஆங்கிலேயர்கள் | இ) 1600 |
| 3. | டேனியர்கள் | ஈ) 1616 |
| 4. | பிரெஞ்சுக்காரர்கள் | அ) 1664 |

## IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக:

1. சுயசரிதை, எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும்.
   **விடை: சரி**
2. நாணயங்கள் பயன்பாட்டு பொருள் ஆதாரங்களுள் ஒன்று ஆகும்.
   **விடை: சரி**
3. ஆனந்தரங்கம், பிரிட்டிஷ் மொழிபெயர்ப்பாளராக இருந்தார்.
   **விடை: தவறு**
4. வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடங்கள் ஆவணக் காப்பகங்கள் என்றழைக்கப்படுகிறது.
   **விடை: சரி**

## V. 1. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை (✓) செய்க:

1. **கவர்னர் நினோ–டி–குன்கா போர்ச்சுக்கீசிய தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார்.**
2. **போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவிலிருந்து கடைசியாக வெளியேறினர்.**
3. **டச்சுக்காரர்கள், சூரத்தில் தங்கள் முதல் வணிக மையத்தை நிறுவினர்.**
4. **இங்கிலாந்தின் மன்னர் முதலாம் ஜேம்ஸ், ஜஹாங்கீர் அவைக்கு சர் தாமஸ் ரோவை அனுப்பினார்.**

அ) 1 மற்றும் 2 சரி ஆ) 2 மற்றும் 4 சரி
இ) 3 மட்டும் சரி ஈ) 1,2 மற்றும் 4 சரி

**விடை: ஈ) 1,2 மற்றும் 4 சரி**

### 2. தவறான இணையைக் கண்டறிக.

அ) பிரான்சிஸ் டே – டென்மார்க்
ஆ) பெட்ரோ காப்ரல் – போர்ச்சுகல்
இ) கேப்டன் ஹாக்கின்ஸ் – இங்கிலாந்து
ஈ) கால்பர்ட் – பிரான்ஸ்

**விடை: அ) பிரான்சிஸ் டே - டென்மார்க்**

## VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி:

**1. ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறுகுறிப்பு தருக.**
வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம் ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படுகிறது.

**2. நாணயங்களின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.**
* நாணயங்கள், நிர்வாக வரலாற்றை அறிய ஒரு நல்ல ஆதாரமாக திகழ்கின்றன.
* நவீன இந்தியாவின் முதல் நாணயம் கி.பி. 1862–ம் ஆண்டில் ஆங்கில ஆட்சியில் வெளியிடப்பட்டது.
* இராணி விக்டோரியாவுக்குப் பிறகு அரியணை ஏறிய மன்னர் ஏழாம் எட்வர்டு தனது உருவம் தாங்கிய நாணயத்தை வெளியிட்டார்.



BRILLIANT PUBLICATIONS

**3. இளவரசர் ஹென்றி "மாலுமி ஹென்றி" என ஏன் அழைக்கப்படுகிறார்?**

TNPSC JOB

* ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும், போர்ச்சுகல் மட்டும் இந்தியாவிற்கு புதிய கடல் வழியைக் கண்டுபிடிப்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தது.
* போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி பொதுவாக "மாலுமி ஹென்றி" என அறியப்படுகிறார்.
* அவர் உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்தார்.

**4. இந்தியாவில் டச்சுக்காரர்களால் நிறுவப்பட்ட முக்கிய வர்த்தக மையங்களின் பெயரை எழுதுக.**

இந்தியாவில் பழவேற்காடு, சூரத், சின்சுரா, காசிம் பஜார், பாட்னா, நாகப்பட்டினம், பாலசோர் மற்றும் கொச்சின் போன்ற இடங்களில் அவர்களது முக்கிய வர்த்தக மையங்கள் இருந்தன.

**5. இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.**

ஆக்ரா, அகமதாபாத் மற்றும் புரோச் ஆகிய இடங்களில் ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்கள் இருந்தன.

BRILLIANT PUBLICATIONS

## VII. விரிவான விடையளி:

**1. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.**

* நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் நாட்டின் அரசியல், சமூக – பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றங்களை பற்றி அறிய நமக்கு உதவுகின்றன. அவை எழுதப்பட்ட ஆதாரங்கள். பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள் என வகைப்படுத்தப் படுகின்றன.

**எழுதப்பட்ட ஆதாரங்கள்:**

* அச்சு இயந்திரம் கண்டுபிடிப்பின் விளைவாக கலை, இலக்கியம், வரலாறு, அறிவியல் போன்ற துறைகளைப் பற்றி மக்கள் எளிதாக அறிய முடிந்தது.
* எழுதப்பட்ட ஆதாரங்கள் என்பவை இலக்கியங்கள், பயணக்குறிப்புகள், நாட்குறிப்புகள், சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
* மார்கோபோலோவின் பயணக் குறிப்புகள், பிரெஞ்சு வர்த்தகத்தின் மொழி பெயர்ப்பாளரான ஆனந்தரங்கம் எழுதிய பிரெஞ்சு இந்திய உறவு முறை பற்றிய அன்றாட நிகழ்வுகளின் குறிப்புகள் போன்றவை சில எழுதப்பட்ட ஆதாரங்கள் ஆகும்.

**பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள்:**

* பயன்பாட்டு பொருள் ஆதாரங்களான பல ஓவியங்கள் மற்றும் சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாகும்.
* அவை தேசியத் தலைவர்களின் சாதனைகள், வரலாற்றுப் பிரமுகர்கள் பற்றிய தகவல்கள், இந்தியக் கட்டடக் கலையின் கலை அம்சம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை பற்றிய தகவல்களை தருகின்றன.
* சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டை, பாண்டிச்சேரி புனித லூயிஸ் கோட்டை, டெல்லி பாராளுமன்றம் ஆகியன சில ஆதாரங்களாகும்.
* மேலும், நாணயங்கள் நிர்வாக வரலாற்றை அறிய ஒரு சிறந்த ஆதாரமாகும். இந்தியாவின் முதல் நாணயம் கி.பி.1862 ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சியில் வெளியிடப்பட்டது.

**2. போர்ச்சுக்கீசியர்கள் எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?**

* வாஸ்கோடகாமா இந்திய மாலுமி ஒருவரின் உதவியோடு கி.பி. (பொ.ஆ) 1498இல் கள்ளிக்கோட்டை அடைந்தார். மன்னர் சாமரின் அவரை வரவேற்றார்.
* இரண்டாவது போர்ச்சுகீசிய மாலுமி பெட்ரோ அல்வாரிஸ் காப்ரல் என்பவர் வாஸ்கோடகாமாவின் கடல் வழியைப் பின்பற்றி 13 கப்பல்களில் சில 100 வீரர்களுடன் 1500ஆம் ஆண்டு கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார்.
* வாஸ்கோடகாமா 1501இல் இருபது கப்பல்களுடன் இரண்டாவது முறையாக இந்தியா வந்தடைந்தார்.
* அப்பொழுது கண்ணனூரில் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார்.
* பின்னர் கள்ளிக்கோட்டை, கொச்சின் பகுதிகளிலும் நிறுவினார்.
* இதனால் கோபம்கொண்ட மன்னர் சாமரின் போர்ச்சுக்கீசியரைத் தாக்கினார்.
* ஆனால் அவர் போர்ச்சுக்கீசியரால் தோற்கடிக்கப்பட்டார்.
* பின்னர் கொச்சின் போர்ச்சுக்கீசிய கிழக்கிந்திய கம்பெனியின் முதல் தலைநகரமாயிற்று.

TNPSC JOB | www.tnpscjob.com

3. **ஆங்கிலேயர்கள், எவ்வாறு இந்தியாவில் தங்களது வர்த்தக மையங்களை நிறுவினர்?**

- 1615ல் ஜஹாங்கீர் அவைக்கு சர் தாமஸ் ரோ அனுப்பப்பட்டார். அவர் பேரரசர் ஜஹாங்கீரிடம் இந்தியாவில் வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார்.
- உரிமையைப்பெற்ற சர் தாமஸ் ரோ ஆக்ரா, அகமதாபாத் மற்றும் புரோச் ஆகிய இடங்களில் வணிக மையங்களை நிறுவினார்.
- ஆங்கிலேயர்கள் தங்களது முதல் வணிக மையத்தை வங்காள விரிகுடா கடற்கரையில் உள்ள மசூலிப்பட்டினத்தில் 1611ல் நிறுவினர். இது கோல்கொண்டா அரசின் ஒரு முக்கிய துறைமுகமாகும்.
- 1639ல் பிரான்சிஸ் டே சந்திரகிரி மன்னரான சென்னப்ப நாயக்கரிடமிருந்து மெட்ராசை குத்தகைக்குப் பெற்றார்.
- அங்கு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி புனித ஜார்ஜ் கோட்டை என அழைக்கப்படும் தனது புகழ்வாய்ந்த வணிக மையத்தை நிறுவியது.
- இது ஆங்கிலேயரின் முதல் கோட்டையாகவும், கிழக்குப் பகுதி முழுமைக்குமான தலைமையிடமாகவும் விளங்கியது.
- 1668ல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஆண்டுக்கு 10 பவுண்டுகள் குத்தகை கொடுத்து பம்பாய் தீவை மன்னர் இரண்டாம் சார்லசிடமிருந்து பெற்றது.
- 1690 ஆம் ஆண்டு சுதாநுதி என்ற இடத்தில் ஜாப் சார்னாக் என்பவரால் ஒரு வர்த்தகமையம் நிறுவப்பட்டது.
- சுதாநுதி, காளிகட்டம் மற்றும் கோவிந்தபூர் ஆகிய மூன்று கிராமங்களின் ஜமீன்தாரி உரிமையை 1698இல் கிழக்கிந்திய கம்பெனி பெற்றது.

## IX. உயர் சிந்தனை வினா:

1. **கான்ஸ்டாண்டி நோபிள் வீழ்ச்சி ஐரோப்பிய நாடுகளை எவ்வாறு பாதித்தது?**

- கி.பி. (பொ.ஆ) 1453இல் துருக்கியர்களால் கான்ஸ்டாண்டி நோபிள் கைப்பற்றப்பட்ட பிறகு இந்தியாவிற்கும், ஐரோப்பாவிற்கும் இடையிலான நிலவழி மூடப்பட்டது.
- துருக்கி வட ஆப்பிரிக்காவிலும், பால்கன் தீபகற்பத்திலும் நுழைந்தது. இது ஐரோப்பிய நாடுகளை கிழக்கு நாடுகளுக்குப் புதிய கடல் வழியைக் கண்டுபிடிக்கத் தூண்டியது.

# கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. **நிர்வாக வரலாற்றை அறிய ஒரு சிறந்த ஆதாரமாக திகழ்வது ................ .**

அ) வரைபடங்கள் ஆ) நாணயங்கள்
இ) கோட்டைகள் ஈ) கடற்பயணங்கள்

**விடை: ஆ) நாணயங்கள்**

2. **இந்தியாவிலிருந்த போர்ச்சுக்கீசியப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்ட முதல் கவர்னர்**

அ) அல்மெய்டா ஆ) அல்புகர்க்
இ) வாஸ்கோடகாமா ஈ) பார்த்தலோமியோ டயஸ்

**விடை: அ) அல்மெய்டா**

3. **பழவேற்காட்டில் டச்சுக்காரர்கள் கட்டிய கோட்டை**

அ) கெல்டிரியா கோட்டை ஆ) புனித ஜார்ஜ் கோட்டை
இ) வில்லியம் கோட்டை ஈ) செங்கோட்டை

**விடை: அ) கெல்டிரியா கோட்டை**

4. **கி.பி 1673இல் பீஜப்பூரின் ஆட்சியாளராக இருந்தவர்**

அ) இப்ராஹிம் லோடி ஆ) ஷெர்கான் லோடி
இ) தௌலத்கான் லோடி ஈ) முகம்மது லோடி

**விடை: ஆ) ஷெர்கான் லோடி**

TNPSC JOB | www.tnpscjob.com

5. தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்த மாலுமி ................ .

அ) அமெரிக்கோ வெஸ்புகி ஆ) பார்த்தலோமியோ டயஸ்

இ) கொலம்பஸ் ஈ) மெகல்லன்

**விடை ஆ) பார்த்தலோமியோ டயஸ்**

6. இந்திய தேசிய ஆவணக்காப்பகம் (NAI) அமைந்துள்ள இடம் ................ .

அ) புதுடெல்லி ஆ) சென்னை இ) கோவை ஈ) தஞ்சாவூர்

**விடை: அ) புதுடெல்லி**

7. தரங்கம்பாடியில் அச்சுக்கூடத்தை நிறுவியவர் ................ ஆவார்.

அ) ஜி. யூ. போப் ஆ) கால்டுவெல்

இ) ஜான்டி பிரிட்டோ ஈ) சீகன்பால்கு

**விடை: ஈ) சீகன்பால்கு**

8. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு

அ) 1757 ஆ) 1758 இ) 1759 ஈ) 1760

**விடை: அ) 1757**

9. பக்சார்போர் நடைபெற்ற ஆண்டு

அ) 1762 ஆ) 1764 இ) 1766 ஈ) 1768

**விடை: ஆ) 1764**

10. வியாபாரத்திற்காக இந்தியா வந்த முதல் ஐரோப்பியர்

அ) பிரஞ்சுகார்கள் ஆ) ஆங்கிலேயர்கள்

இ) போர்ச்சுக்கீசியர்கள் ஈ) டச்சுகாரர்கள்

**விடை: இ) போர்ச்சுகீசியர்கள்**

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம் ................ .

**விடை: ஆவணக்காப்பகங்கள்**

2. பாண்டிச்சேரி பிரெஞ்சு வர்த்தகத்தின் மொழி பெயர்ப்பாளர் ................ .

**விடை: ஆனந்தரங்கம்**

3. ஆனந்தரங்கம் குறிப்புகள் ................ இந்திய உறவுகள் பற்றி கூறுகிறது.

**விடை: பிரெஞ்சு**

4. ஆசியாவில் மிகப்பெரிய ஆவணக்காப்பகம் ................ .

**விடை: இந்திய தேசிய ஆவணக்காப்பகம், புதுடெல்லி**

5. தென்னிந்தியாவின் மிகப்பழமையான மற்றும் மிகப்பெரிய களஞ்சியங்களுள் ஒன்று ............. ஆகும்.

**விடை: தமிழ்நாடு ஆவணக்காப்பகம்**

6. இந்திய தேசிய ஆவணக்காப்பகத்தின் தந்தை ................ .

**விடை: ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட்**

7. தமிழ்நாடு ஆவணக்காப்பகம் ................ என அழைக்கப்படுகிறது.

**விடை: சென்னை பதிப்பாசனம்**

8. 1917ல் சென்னை நாட்குறிப்பு பதிவேடுகளை வெளியிட்டவர் ................ .

**விடை: டாட்வெல்**

9. 1609ல் புனித டேவிட் கோட்டை ................ கடலூரில் கட்டப்பட்டது.

**விடை: ஆங்கிலேயரால்**

10. இந்திய ரிசர்வ் வங்கி ................ ல் நிறுவப்பட்டது.

**விடை: 1935**

11. நவீன இந்தியாவின் முதல் நாணயம் கி.பி. 1862ல் ................ ஆட்சியில் வெளியிடப்பட்டது.

**விடை: ஆங்கில**

12. ................இல் போர்ச்சுகீசியர் ஆசியாவில் கடற்படை மேலாண்மையைக் கோரினார்.

**விடை: கி.பி. 1950**

13. விஜயநகரப் பேரரசுடன் நட்புறவை மேற்கொண்டவர் ................ ஆவார்.

**விடை: அல்போன்சா - டி - அல்புகர்க்**

14. வாஸ்கோடாகாமாவை ................ மன்னர் வரவேற்றார்.

**விடை: சாமரின்**

15. போர்ச்சுக்கீசியரின் கிழக்கிந்திய கம்பெனியின் முதல் தலைநகரம் ................ .

**விடை: கொச்சின்**

## III. பொருத்துக:

| | | |
|---|---|---|
| 1. | புனித பிரான்சிஸ் ஆலயம் | அ) மெட்ராஸ் |
| 2. | செயின்ட் லூயிஸ் கோட்டை | ஆ) கடலூர் |
| 3. | புனித ஜார்ஜ் கோட்டை | இ) கொச்சின் |
| 4. | புனித டேவிட் கோட்டை | ஈ) புதுடெல்லி |
| 5. | இந்தியா கேட் | உ) பாண்டிச்சேரி |

**விடை:**

| | | |
|---|---|---|
| 1. | புனித பிரான்சிஸ் ஆலயம் | இ) கொச்சின் |
| 2. | செயின்ட் லூயிஸ் கோட்டை | உ) பாண்டிச்சேரி |
| 3. | புனித ஜார்ஜ் கோட்டை | அ) மெட்ராஸ் |
| 4. | புனித டேவிட் கோட்டை | ஆ) கடலூர் |
| 5. | இந்தியா கேட் | ஈ) புதுடெல்லி |

## IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக:

1. வாஸ்கோடகாமா 1509 ல் இருபது கப்பல்களுடன் இரண்டாவது முறையாக இந்தியா வந்தடைந்தார்.

**விடை: தவறு**

2. மன்னர் சாமரின் போர்ச்சுக்கீசியரால் தோற்கடிக்கப்பட்டார்.

**விடை: சரி**

3. வெளிநாட்டுப் பயணிகளின் பயணக்குறிப்புகள் அமெரிக்கர்களை இந்தியாவை நோக்கி ஈர்த்தது.

**விடை: தவறு**

4. அல்புகர்க் விஜயநகரப் பேரரசுடன் பகைமை பாராட்டினார்.

**விடை: தவறு**

5. கத்தோலிக்க கிறித்துவம் இந்தியாவின் கிழக்கு, மேற்கு கடற்கரையோர பகுதிகளில் பரவியது.

**விடை: சரி**

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB

## V. 1. பின்வரும் கூற்றினை ஆராய்ந்து சரியானவற்றை (✓) செய்க:

1. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர் அல்போன்சா டி அல்புகர்க்
2. அவர் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து நவம்பர் 1510ல் கோவாவைக் கைப்பற்றினார்.
3. 1515ல் பாரசீக வளைகுடாவின் உள்ள ஆர்மஸ் துறைமுகப் பகுதிகளில் போர்சுக்கீசிய அதிகாரத்தை அதிகாரத்தை விரிவுப்படுத்தினார்.
4. அல்போன் சோ டி அல்புகர்க் இந்திய பெண்களுடனமான போர்ச்சுகீசிய திருமணங்களை ஊக்குவித்தார்.

அ) அனைத்தும் சரி　　ஆ) அனைத்தும் தவறு
இ) 3 மட்டும் சரி　　ஈ) 2 மட்டும் தவறு

**விடை: அ) அனைத்தும் சரி**

### 2. தவறான இணையைக் கண்டறிக.

1. சாமரின் – கள்ளிக் கோட்டை
2. பகதூர்ஷா – குஜராத்
3. செயிஸ்டகான் – சென்னை ஆளுநர்
4. ஷெர்கான் லோடி – பிஜப்பூர்

**விடை: 3. செயிஸ்டகான் - சென்னை ஆளுநர்**

## VI. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி:

**1. எழுதப்பட்ட ஆதாரங்கள் என்பவை யாவை?**
எழுதப்பட்ட ஆதாரங்கள் என்பவை இலக்கியங்கள், பயணக்குறிப்புகள், நாட்குறிப்புகள், சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**2. நீலநீர்க்கொள்கை என்றால் என்ன?**
* பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா இந்தியாவிற்கு 1505ல் அனுப்பப்பட்ட முதல் போர்ச்சுக்கீசிய ஆளுநர்.
* இவர் பின்பற்றிய கொள்கை நீலநீர்க் கொள்கை எனப்பட்டது.
* இதன் நோக்கம் இந்தியாவில் போர்ச்சுக்கீசிய கப்பற்படையை பலப்படுத்துவதாகும்.

**3. இந்தியாவில் ஆங்கிலேயரின் வெற்றிக்கு காரணங்கள் யாவை?**
போர்ச்சுக்கீசியர்கள்,டச்சு, டேனிஷ் மற்றும் பிரெஞ்சு ஆகியவற்றின் மீதான ஆங்கிலேயரின் வெற்றிக்கு ஆங்கிலேயரின் வணிக ரீதியான போட்டி, உயர்ந்த தியாகம், அரசின் ஆதரவு, கடற்படை மேலாதிக்கம், தேசிய தன்மை, மற்றும் ஐரோப்பாவில் அவர்களின் அதிகாரம் ஆகியன காரணமாயின.

## VII. விரிவான விடையளி.

**1. தமிழ்நாடு ஆவணக் காப்பகம் குறித்து கட்டுரை வரைக.**
* தற்போது தமிழ்நாடு ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படும் சென்னை பதிப்பாசனம் சென்னையில் அமைந்துள்ளது.
* இது தென்னிந்தியாவின் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய களஞ்சியங்களுள் ஒன்றாகும். அங்குள்ள பெரும்பாலான ஆவணங்கள் ஆங்கிலத்தில் உள்ளன.
* மேலும் அங்கு டச்சு, டேனிஷ், பாரசீக, மராத்திய நிர்வாக பதிவுகளின் தொகுப்புகள் பிரெஞ்சு, போர்ச்சுக்கீசிய, தமிழ் , உருது போன்ற மொழிகளின் உள்ளன.
* தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 1642ம் ஆண்டு டச்சு பதிவுகளின் தொகுப்புகள் உள்ளன. இது கொச்சி மற்றும் சோழமண்டல கடற்கரையில் உள்ள இடங்களுடன் தொடர்புடையது. இந்த பதிவுகள் 1657 1845 காலப் பகுதியை உள்ளடக்கியது.
* டேனிஷ் பதிவுகள் 1777, 1845 காலப்பகுதியை உள்ளடக்கியது. டாட்வெல் என்பவரின் பெரும் முயற்சியால் 1917 ஆம் ஆண்டு 'சென்னை நாட்குறிப்பு பதிவுகள்' வெளியிடப்பட்டது.
* வரலாற்று ஆராய்ச்சியை ஊக்குவிப்பதில் அவருக்கு இருந்த மிகுந்த ஆர்வத்தைக் இது காட்டுகிறது. தமிழ்நாடு ஆவணக்காப்பக வரலாற்றின் ஒரு புதிய அத்தியாயத்தை அவர் தொடங்கி வைத்தார்.

BRILLIANT PUBLICATIONS